குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். அது நாளை மறுநாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து மேலவைத் தலைவர் அனுப்பியுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/75), 3—3—1975-ஆம் நாளன்றும், தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/75), 22—3—1975-ஆம் நாளன்றும் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மேலும், கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள், 22—3—1975-ஆம் நாளன்று மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, திருத்தம் எதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற் காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/75).

2. தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/74).

(முற்பகல் 10.00.)

(3) தகவல் கோரல்.

(அ) அறிவிக்கை கொடுக்கப்பட்ட சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள்மீது உறுப்பினர்கள் தகவல் கோரல்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சட்டக் கல்லூரி விடுதியில் நேற்று இரவு மாணவர்கள் தாக்கப்பட்டு 50 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார் கள். அப்பேர்பட்ட நிலையைப் பற்றிக் கண்டிப்பாக................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தகவல் கேட்டி ருக்கிறோம், இன்னும் தகவல் வரவில்லை என்று அரசுத் தரப்பிலிருந்து கூறியிருக்கிறார்கள். இதை விவாதிக்க எடுத்துக் கொள்ள